**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 223/2022**

**Deposition of P.W.** 9

Name : திரு. அருள்பிரகாஷ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:17.06.2026

**Accused** absent. Petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது திருநெல்வேலி மாநகர் பேட்டை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி பணி மாறுதல் பெற்று புதுபணியிடத்திற்காக காத்திருக்கிறேன். இதற்கு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது நிலைய உதவி ஆய்வாளர் திரு. ரமேஷ் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்ற எண். 558/2020 பிரிவு 4(1) (A) TNP Act படியான வழக்கில் 30.04.2020ம் தேதி 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகேஷ், ராஜன் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயா◌ெர் சய்தேன் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 பின்னர் சாட்சிகள் உதவி ஆய்வாளர் திரு.ரமேஷ், சிறப்பு உதவி ஆய்வாளர் பிரபகுமார், சிறப்பு உதவி ஆய்வாளர்திரு. ராஜன் ஸ்டான்லி முதல்நிலை காவலர் 1028 திரு. ராபர்ட் ராஜ் ஆகியவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். நிலையத்தில் வைத்து வழக்கின் எதிரி ரமேஷ் என்பவரை 14.30 மணிக்கு கைது செய்தும், வழக்கின் எதிரி மற்றும் அத்தாட்சியினை

கனம் நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆர்.பி.எண்.51/2020 என சான்று பொருள் ஏற்கப்பட்டது. பின்னர் வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தினை திருநெல்வேலி ரசாயன பகுப்பாய்வு கூடத்திற்கு முதல்நிலைய காவலர் 1136 திரு. ஜாண்கிங்சிலி என்பவரை நியமித்து நீதிமன்றம் வாயிலாக அனுப்பி வைத்தேன். 26.12.2020ம் தேதி ஆய்வறிக்கை பெற்று அறிவியல் அலுவலர் திரு. குருசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல்நிலை காவலர் திரு. ஜாண்கிங்சிலி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்தில் நிறைய வீடுகள் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் வீட்டுடன் சேர்ந்த இடத்தில் சம்பவம் நடந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் வீட்டின் பின்புறம் நடந்ததாக காட்டப்பட்டுள்ளது. எதிரியின் வீட்டில் உள்ள நபர்களை நான் விசாரிக்கவில்லை. அருகில் உள்ள வீடுகளில் உள்ளவர்களையும் நான் விசாரிக்கவில்லை. காவல்துறையினரை சாட்சியாக விசாரித்துள்ளேன் என்றால் சரிதான். கைப்பற்றும் போது சாராயம் இருந்தது. சாராயம் வடிக்க பயன்படகூடிய பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை. எதிரி மீது பொய் வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.